*Kalanjiyam International Journal of Tamil Studies*
*An international, peer-reviewed quarterly academic research journal*
**ISSN: 2456-5148 (Online)**
**www.ngmtamil.in**

**களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Quarterly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor 4.0 Multidisciplinary International
DOI: https://doi.org/10.63300/kijts06022026

**Vol. 6 No. 02, August 2026, p389-395** | Available online at: www.tamilmanam.in
*Original Research Paper – Peer Reviewed*

# சங்க இலக்கியம் முதல் காப்பிய இலக்கியம் வரை: தமிழர் ஓவியக்கலையின் பண்பாட்டு அடையாளமும் பரிணாமமும் – ஓர் திறனாய்வு

From Sangam Literature to Epic Literature: The Cultural Identity and Evolution of Tamils' Art of Painting – A Critical Study

**முனைவர். கோ. உப்பிலி சீனிவாசன்,**

உதவிப் பேராசிரியர், நூலகத்துறை (கலை, அறிவியல், மானுடவியல் மற்றும் கல்வியியல் துறை), சாஸ்த்ரா நிகர்நிலைப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்..

**Dr. G. Uppili Srinivasan*,**
*Assistant Professor, Knowledge Resource Centre (School of Arts, Sciences, Humanities and Education),*
*SASTRA Deemed University, Thanjavur.*
*Email: uppilisrinivasan@exam.sastra.edu, Tel:9965031220*

**முனைவர். எஸ். பிருந்தா,**

உதவிப் பேராசிரியர், கல்வியியல் துறை (கலை, அறிவியல், மானுடவியல் மற்றும் கல்வியியல் துறை), சாஸ்த்ரா நிகர்நிலைப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

**Dr. S. Brindha*,**
*Assistant Professor, Department of Education (School of Arts, Sciences, Humanities and Education),*
*SASTRA Deemed University, Thanjavur.*
*Email: brindhapsych@src.sastra.edu, Tel: 9994301033.*

*Article history*
Received: 10-08-2026
Revised: 10-08-2026
Accepted: 17-08-2026
**Published: 18-08-2026**
*Corresponding Author Email: uppilisrinivasan@exam.sastra.edu, Tel:9965031220*

**Abstract:** There are sixty-four traditional fine arts, and painting is one among them. Since ancient times, as a testament to the early stages of human development, people drew on rocks and the ground using stones and plant root extracts, depicting their favorite scenes from nature. There is no doubt that these later served as vital evidence and a foundational guide.

The objective of this essay is to explore how the art of painting is presented across various Tamil literary works as a reflection of Tamil cultural identity, how widely it has been depicted throughout literary history, and how past generations have cherished, preserved, and handed it down to us today."

**Keywords:** *Tamil literature, Sangam literature, Tamil painting art, Cultural identity, Art history.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

© 2014 The Author(s). This open access article is distributed under a Creative Commons Attribution (CC-BY) license

**ஆய்வுச் சுருக்கம்**

ஆயக் கலை அறுபத்திநான்காம். அதில் ஒன்றாம் ஓவியக்கலை. பழங்காலந்தொட்டே மனிதன் தன்னுடைய முதற்படி வளர்ச்சியினை எடுத்துக்காட்டும் விதமாக பாறைகளிலும் தரையிலும் தன்னுடைய ஓவியங்களை கற்கொண்டும் மர வேர்களின் சார்கொண்டும் தன் மனதிற்குப் பிடித்த இயற்கையினையும் அதை சார்ந்த காட்சிகளையும் வரைந்தான். பிற்காலத்தில் அவை ஒரு சான்றாண்மையாக, முன்னோடியாக திகழ்ந்தன என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இக்கட்டுரையின் நோக்கமும் பல்வேறு இலக்கியங்களில் ஓவியக்கலையானது எவ்வாறெல்லாம் தமிழரின் பண்பாட்டு அடையாளங்களாக எடுத்துக்காட்டப்படுகிறது மற்றும் இலக்கிய வரலாறுகளில் ஓவியக்கலையானது எவ்வாறு பரவலாக சித்தரிக்கப்பட்டுள்ளது என்பதனையும் அதை எவ்வாறெல்லாம் போற்றி பாதுகாத்து இத்தலை முறையினருக்கும் தந்து விட்டு சென்றிருக்கிறார்கள் என்பதைப் பற்றியதாகும்.

**சங்கத் தமிழர் சிந்தனையில் சித்திரமாய் மலர்ந்த கலை,**
**காப்பியத் தமிழர் வாழ்வினில் காவியமாய் நிலைத்த கலை,**
**வண்ணங்களில் பண்பாட்டின் வரலாற்றை வரைந்த கலை,**
**வாழ்வியலின் உணர்வுகளை விழியின்முன் நிறுத்திய கலை,**
**தலைமுறைகள் போற்றிடும் தமிழரின் தொன்மைப் பெருமை,**
**ஓவியமாய் என்றும் ஒளிரட்டும் தமிழரின் பண்பாட்டு மரபு!**

**முன்னுரை:**

“**சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்**’ என்பார்கள். கடல் கடந்த, மொழிகளை கடந்து, எல்லை கடந்து, மதம், இனம் கடந்து மக்களின் மனதை கொள்ளை கொள்ளும் விந்தை மொழி ஓவியம். காண்போரை கவர்ந்து இழுத்து மனதை மயக்கி தன்வசப்படுத்தக்கூடிய ஆற்றல் ஓவியத்துக்கு உண்டு. வார்த்தைகளால் விவரிக்க முடியாத உணர்ச்சிகளை, வண்ணங்களில் வெளிப்படுத்தும் வித்தை தெரிந்தது ஓவியம். தமிழர் வளர்த்த பல கலைகள் காலப்போக்கில் மறைந்தாலும், இன்றும் ஓவியக்கலை போற்றி பாதுகாக்கப்படுகிறது. பள்ளிகளில் ஓவிய போட்டி நடத்தி மாணவர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். கல்வியறிவை விட கற்பனை அறிவே ஓவியம் வரைதலுக்கு அடிப்படை தகுதியாக விளங்குகிறது.

ஒவ்வு என்னும் வினையடியாகப் பிறந்த ஓவு, ஓவம், ஓவியம் என்னும் இம்மூன்று சொற்களும் சித்திரத்தையே குறிக்கின்றன. 'ஓவியனுள்ளத் துள்ளியது வியப்போன்' எனக்கூறும் மணிமேகலைச் செய்யுள் வரியிலிருந்து தமிழக ஓவியர்கள் புறக்கண் கண்டதை அகக்கண் கொண்டு நோக்கி, அதை அகத்தினின் தீட்டி பின்னர் பிற ஊடகங்களில் வரைந்தனர் என்பது புலனாகிறது. நிறம் தீட்டாமல் வரையும் ஓவியத்துக்கு புனையா ஓவியம் (Outline drawing) என்று பெயர். 'புனையா ஓவியம் கடுப்ப'

என நெடுநல்வாடை குறிப்பிடுகிறது. ஓவியத் தொழிலுக்கு 'வட்டிகைச் செய்தி' என்னும் பெயரும் உண்டு. வட்டிகை என்றால் துகிலிகை (brush).

ஓவியக் கலையினைப் பற்றி சங்க இலக்கிய பாடல்கள் மிகத் தெளிவாக குறிப்பிட்டிருக்கின்றன. அவைகளில் சிலவற்றை கீழே காண்போம்.

ஓவியர் தம் பாவையினோ டொப்பரிய நங்கை' - சிந்தாமணி

'ஓவியப் பாவை யொப்பாள்' - சிந்தாமணி

'ஓவியத்து எழுத ஒண்ணா, உருவத்தாய்' - கம்பராமாயணம்

'கூட்டினான் மணிபல தெளித்துக் கொண்டவன் தீட்டினான் கிழிமிசைத் திலகவள் நுதல்' - சிந்தாமணி

'ஓவுறழ் நெடுஞ்சுவர்' - பதிற்றுப்பத்து

'ஓவியத்துறை கைபோய ஒருவனை' - நைடதம்

'ஓவியன் உள்ளத்து உள்ளியது வியப்போன்' - மணிமேகலை

ஓவியக்கலை என்பது, வரைதல், கூட்டமைத்தல் மற்றும் பிற அழகியல் சார்ந்த செயற்பாடுகளையும் உள்ளடக்கி, தோல், பட்டுத் துணி, துணி, மரம், கண்ணாடி, போன்ற ஊடகங்களில் நிறப்பூச்சுகளைப் பயன்படுத்தி, வரைபவரின் வெளிப்பாட்டு மற்றும் கருத்தியல் நோக்கங்களை வெளிக்கொணரும் ஒரு கலை ஆகும். ஓவியக்கலை, பல்வேறு ஆக்கத் திறன்களை, உள் வாங்குவதற்கும், ஆவணப் படுத்துவதற்கும், வெளிப் படுத்துவதற்குமான ஒரு வழிமுறை ஆகும். ஓவியங்கள், இயற்கையானவையாகவோ, ஒரு பொருளைப் போல வரையப்பட்டவையாகவோ, நிழற்படத்தை ஒத்தவையாகவோ, பண்பியல் தன்மை கொண்டனவாகவோ இருக்கலாம். அத்துடன் இவை ஒரு செய்தியை விளக்கும் உள்ளடக்கம் கொண்டவையாக, குறியீட்டுத் தன்மை கொண்டனவாக, உணர்ச்சி பூர்வமானவையாக அல்லது அரசியல் சார்ந்தவையாகக் கூட இருக்கக்கூடும். ஓவிய வரலாற்றின் பெரும்பகுதியில் ஆன்மீகம் சார்ந்த எண்ணக் கருக்களும், அழகுக் கூட்டல்களும் முதன்மை பெறுகின்றன. இத்தகைய ஓவியங்கள் மட்பாண்டங்களில் வரையப்பட்ட புராணக் கதைக் காட்சிகளிலிருந்து, வழிபாட்டுக்குரிய கட்டிடங்களில், சுவர்களையும், மேல் விதானங்களையும் அழகூட்டும் சமயம் சார்ந்த, பெரிய ஓவியங்கள் வரை வேறுபடுகின்றன. 'ஓவியனுள்ளத் துள்ளியது வியப்போன்' எனக்கூறும் மணிமேகலைச் செய்யுள் வரியிலிருந்து தமிழக ஓவியர்கள் புறக்கண் கண்டதை அகக்கண் கொண்டு நோக்கி, அதை அகத்தினின் தீட்டி பின்னர் பிற ஊடகங்களில் வரைந்தனர் என்பது புலனாகிறது. நிறம் தீட்டாமல் வரையும் ஓவியத்துக்கு புனையா ஓவியம் என்று பெயர். 'புனையா ஓவியம் கடுப்ப' என நெடுநல்வாடை குறிப்பிடுகிறது.

இன்று தமிழகத்தில் உள்ள ஓவியங்களில் பழமையானவை பல்லவர் கால ஓவியங்கள் என்று கூறமுடியாது. அதையும் தாண்டி மிகப் பழமையான ஓவியங்கள் உள்ளன என்பதற்கு சான்றாக சங்ககாலப் பாடல்களில் பல குறிப்புகள் உள்ளன. கி பி 100 க்கும் கி பி 250 க்கும் இடைப்பட்ட காலமே சங்க காலம் என்று அறியப்பட்டது. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு போன்ற நூல்களும் அதைத் தொடர்ந்து வந்த சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற நூல்களிலும் ஓவியக் கலையின் மாண்பினையும் சிறப்பினையும் தெளிவு படக் கூறி இருக்கிறார்கள். சங்க இலக்கியங்கள் எழுதிய 2382 புலவர்களில் 473 பெண்பாற் புலவர்கள். புலவர்கள் தான் சார்ந்த பகுதியை ஆண்ட மன்னர்கள், பேரரசர்கள் போன்றோர்களின் கலைத் திறனையும் அதே சமயத்தில் அவர்களின் ஓவியக்கலைத் திறமையையும் தங்களின் பாடலில் பாடத் தவறுவதில்லை.மணிமேகலை காப்பியத்தின் தலைவி ஓவியக்கலையின் இலக்கணங்களைக் கூறும் ஓவியச் செந்நூல் என்னும் நூலைக் கற்றுத்தேர்ந்திருக்கிறார் என்று கூறப்படுகிறது. மணிமேகலைக்கு விரிவுரை எழுதிய உரை ஆசிரியர் அசையாத பொருள்களையும் நகரும் பொருள்களையும் ஓவியமாகத் தீட்டுவதற்கு கடைபிடிக்கவேண்டிய நுட்பங்களைக் குறிப்பிடுகிறார். சங்க இலக்கியங்கள் முழுவதும் மக்களின் அன்றாட வாழ்வோடு தொடர்புடைய ஓவியங்கள் பற்றிய பலக் குறிப்புகள் உள்ளன. அரசனின் அரியணைக்கு மேலே பல வண்ணங்கள் உடைய துணிகளில் பல்வேறு விதமான ஓவியங்கள் தீட்டப்பட்டு விதானமாக இருந்தன. நடனங்கள், நாடகங்கள் நடைபெறும் மேடைகள் வெவ்வேறு ஓவியங்கள் தீட்டப்பட்ட துணிகளால் அலங்கரிக்கப்பட்டு இருந்தன. பாண்டிய அரசனின் மனைவியின் படுக்கையின் மேலே பன்னிரண்டு ராசிகளைக் குறிக்கும் சின்னங்களை ஓவியங்களாகத் தீட்டி வண்ண விதானங்களை அமைத்து இருந்தனர். அந்த ஓவியங்களை நேரில் பார்ப்பது போன்ற ஒரு பிரமிப்பினை ஏற்படுத்தியிருந்தது அந்த ஓவியம் என்று மாங்குடிப் புலவர் கூறி இருக்கிறார்.



கோவில் சுவர்களில் ஓவியங்கள் தீட்டப்பட்டு இருந்தன என்பதை பல்வேறு ஆவணங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. பூம்புகார் நகரத்தில் இந்திர விழா நடந்தபொழுது இருமருங்கிலும் உள்ள

சுவர்களில் வரையப்பட்டுள்ள ஓவியங்களை மக்கள் மெதுவாக ரசித்து சென்றனர் என்று பதிகிறார் சீத்தலை சாத்தனார். திருப்பரங்குன்றத்திற்கு செல்லும் மக்கள் அறிவியல் அடிப்படையில் கோள்களை அறிமுகப்படுத்தும் ஓவியங்களையும், சூரியன் சந்திரன் ஓவியங்களையும், அகல்யாவின் வாழ்க்கையினை சித்தரிக்கும் ஓவியங்களையும் கண்டு மகிழ்ச்சி அடைந்தனர் என்று சங்க இலக்கியங்களில் கூறப்பட்டு இருக்கின்றது.



ஓவியக்கலை சங்ககால மக்களின் வாழ்வோடு ஒன்றி இருந்தது. புலவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார் காவிரிப்பூம்பட்டினத்தை வர்ணிக்கும்பொழுது உணவுச் சாலையில் தீட்டப்பட்டிருந்த திருமகளின் ஓவியமானது அந்த இடத்தையே செல்வசெழிப்பாக உள்ளதுபோல் காட்டியதாகவும் வெளிப்புறம் வரைந்த ஓவியங்கள் சாலைகளில் செல்லும் ரதங்களில் ஏற்பட்ட புழுதியால் பொலிவிழந்து காணப்படுவதாகவும் கூறியிருந்தார். சங்ககாலப் புலவர்கள் அழகான ஒரு பொருளையோ மனிதர்களையோ ஒப்பிட்டுக் கூறும்போது ஓவியத்துடன்தான் ஒப்பிடுவார்கள். எடுத்துக்காட்டாக சிலப்பதிகாரத்தில் கோவலன் மதுரைக்கு பயணம் மேற்கொண்டபொழுது ஒரு துறவி " வாயிலைக் கடந்து செல்லும்போது ஒரு கன்னி எதிர்ப்படுவாள் அவள் அழகிற் சிறந்த ஓவியம் போல் தென்படுவாள் என்று எச்சரித்தார். கதையின் தலைவி மதுரை ஏறியதும் என்று சாபம் கொடுத்தபோது அக்கினிக்கடவுள் ஓவியமாக இருப்பது போல தென்பட்டாள் என்று இளங்கோவடிகள் கூறி இருக்கிறார்.

**ஒருமுக எழினியும், பொருமுக எழினியும்கரந்துவரல் எழினியும் புரிந்துடன் வகுத்தாங்குஓவிய விதானத் துரைபெறு நித்திலத்துமாலை தாமம் வளையுடன் நாற்றி"**

என்ற சிலப்பதிகாரத்தில் அரங்கேற்றுக் காதை வரிகளால் அறியலாம். தோலைப் பதப்படுத்தி அதில் ஓவியக் கோடுகளை வரைந்து உள்பகுதியில் வண்ணங்கள் குழைத்துத் தீட்டி தோல்பாவை மூலம் மக்களுக்குக் “கதை சொல்லிகளாக” வாழ்ந்து கலையை வளர்த்திருக்கிறார்கள்.

***இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்***
***மரப்பாவை சென்றுவந் தற்று.***

என்ற திருக்குறள் அடிகளில் மரப்பாவை பயிற்று வருவதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். “கை புனைந்து இயற்றாக் கவின்பெறுவனப்பு” என்று சங்க இலக்கியம் குறிக்கின்றது. “கண்ணுள் வினைஞர்” என்று ஓவியர்களை பழம்பெரும் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. ஓவியத்தை “ஓவம்” என்கிறார்கள்.



இந்திய வரலாற்றில் ஓவியங்கள் கடவுளரையும், அரசர்களையும் காட்டுவனவாகவே இருக்கின்றன. *இந்திய ஓவியம்* என்பது, இந்தியத் துணைக் கண்டத்தின் பல பகுதிகளிலும் இருந்த பல்வேறு ஓவியப் பாணிகளை ஒருங்கே குறிக்கும் ஒரு தொடராகும். இது எல்லோராவில் காணும் பெரிய சுவரோவியங்கள் முதல் முகலாயரின் சிற்றோவியங்கள் வரை பல்வேறு அளவுகளில் உள்ள ஓவியங்களையும், உலோகங்களால் அழகூட்டப்பட்ட தஞ்சாவூர் பாணி ஓவியங்கள் போன்றவற்றையும் உள்ளடக்குகின்றது. காந்தாரம், தக்சிலா ஆகிய இடங்களில் உள்ள ஓவியங்களில் பாரசீகச் செல்வாக்குக் காணப்படுகின்றது. கிழக்குப் பகுதி ஓவியங்கள் பெரும்பாலும் நாளந்தாவை மையமாகக் கொண்டு வளர்ச்சியடைந்தவை.

கி பி 18 ஆம் நூற்றாண்டில் ஓவியக் கலையானது நாடெங்கிலும் வடபுறமும் தென்புறமும் ஆட்சி செய்த மன்னர்களால் பெரிதும் வளர்க்கப்பட்டது. அவைகள் பல பயணிகளையும் வகைகளையும் உள்ளடக்கி

இருந்தன. குறிப்பாக தமிழகத்தை ஆட்சி செய்த மராட்டிய மன்னர்களும் அரசிகளும் ஒவியக் கலையை மிகப் பெரிய அளவில் ஆதரித்தனர். பட்டுத் துணிகளில் கண்ணாடிகளில் அதிக அளவில் ஓவியங்களை செய்தும் ஆதரித்தனர். காலப் போக்கில் புடைப்பு ஓவியங்களையும் செய்து மிகப் பெரிய ஓவியப் புரட்சி செய்தனர். இன்றளவும் அந்த ஓவியங்கள் அனைத்து தரப்பினராலும் ரசிக்கப்பட்டும் செய்யப்பட்டும் வருகின்றது என்பதே ஓவியக்கலையின் நீண்ட கால வரலாற்றினையும் வெற்றியையும் பதிவிடுகின்றது என்பதை பல வரலாற்று ஆசிரியர்களும், இலக்கிய பேராளர்களும் தெரிவித்துக்கொண்டு இருக்கின்றனர்.

**முடிவுரை**

ஓவியக்கலை என்பது மக்களின் வாழ்க்கையோடு ஒன்றிவிட்டது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. பழங்காலம் தொட்டே கலைகளுக்கு என்று தனி இடத்தை தமிழர்கள் அளித்து வந்தார்கள். இன்றும் அந்த ஓவியக் கலையானது பல புதிய பரிணாம வளர்ச்சியினை பெற்று மக்களிடையே வரவேற்பினைப் பெற்றுள்ளது. அன்றைய ஓவியர்களின் கைவண்ணங்களை இன்றும் கோவில் கூரைகளிலும் சுவர்களிலும் மரச்சிற்பங்களிலும் காணலாம். ஈராயிரம் ஆண்டுகள் பழமையான ஓவியக் கலை அழியாமல் நாமும் போற்றிப் பாதுகாப்போம். அது போல இன்றைய இளைஞர் சமுதாயமும் ஓவியக் கலையின் மாண்பினை காப்பதற்காக பல்வேறு முயற்சியினை எடுத்துவருகின்றார்கள், ஆர்வத்தோடு கற்றுவருகின்றார்கள். தமிழனுக்கு என்று இருந்த ஓவியக் கலை வரலாற்றை எழுதுவதை விட, அதைக் காப்பதற்கான முயற்சிதான் இன்றைய இளைஞர்களின் தலையாயக் கடமை ஆகிறது.

**பார்வை நூல்கள்:**


[1.] "இந்தியர்களின் கைவினைத்தொழில்." *தமிழ்நாடு - மதுரை சிறு தொழிற்சாலைகள் தயாரிப்பு மேம்பாட்டு அமைப்பு*, 23 அக்டோபர் 2012.

[2.] சிதம்பரனார், சாமி. *பட்டினப்பாலை ஆராய்ச்சி உரை*. 2-ஆம் பதிப்பு, இலக்கிய நிலையம், 1973.

[3.] செட்டியார், ஆர். கே. சண்முகம். *சிலப்பதிகாரம்: புகார்க் காண்ட உரை*. புதுமலர் நிலையம், 1946.

[4.] தீட்சிதர், வி. ஆர். இராமச்சந்திர. *சிலப்பதிகாரம்: புகார்க் காண்ட மதிப்புரை*. புதுமலர் நிலையம், 1946.

[5.] வையாபுரிப்பிள்ளை, எஸ். "சிலப்பதிகாரப் புகார்க்காண்டம் முன்னுரை." *சிலப்பதிகாரம்*, புதுமலர் நிலையம், 1946.

[6.] சாமிநாதையர், உ. வே. *நல்லுரைக்கோவை*. பாகம் 2, 6-ஆம் பதிப்பு, 1991, பக். 78.

[7.] வைத்தியலிங்கன், செ. *தமிழ்ப்பண்பாட்டு வரலாறு*. பாகம் 1, 1991, பக். 467.